ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 14,922/1 — 1970 සැප්තැම්බර් 5 වැනි සෙනසුරාදා — 1970.9.5

14,922/1 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 5 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]

## மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 281/1

ம. தே. அ. எண் : சீ. 162/49(8)

1946 ஆம், 1947 ஆம் ஆண்டின் இலங்கை (அரசமைப்பு, சுதந்திரம்) அரசப்பேரவைக் கட்டளைகளின் 51 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் நியமனங்களைச் செய்வதில் மகாதேசாதிபதி அவர்கள் மகிழ்ச்சி அடைகின்றுர் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது :—

| | | |
|---|---|---|
| 1. | குடிவரவுக் குடியகல்வுக் கட்டுப்பாட்டதிகாரியும், இந்தியா பாக்கிஸ்தான் வாசிகள் பதிவு அதிகாரியும் ஆகிய இலங்கை நிருவாக சேவையைச் சேர்ந்த திருவாளர் டபிள்யூ. ரீ. ஜயசிங்க அவர்கள் | பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சின் நிரந்தரச் செயலாளராகிய திருவாளர் எ. ஆர். இரத்னவேல் அவர்கள் இத்தீவினை வந்தடையும்வரை, 1970 செத்தெம்பர் 4 ஆம் திகதியிலிருந்து தமது கடமைகளுடன் பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சின் நிரந்தரச் செயலாளராக பதிற் கடமையாற்றக்கடவர் |
| 2. | திட்டமிடல், வேலைவாய்ப்பு அமைசசின் நிரந்தரச் செயலாளராகிய பேராசிரியர், எச். எ. த எஸ். குணசேகர அவர்கள் | உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சின் நிரந்தரச் செயலாளராகிய கலாநிதி ஜே. பீ. கலேகம அவர்கள் தீவிலில்லாக் காலத்தில், தமது கடமைகளுடன், 1970 செத்தெம்பர் 4 ஆம் திகதியிலிருந்து 15 ஆம் திகதிவரை, உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சின் நிரந்தரச் செயலாளராக பதிற் கடமையாற்றக்கடவர் |
| 3. | உணவு அதிகாரி, இலங்கை நிருவாக சேவையைச் சேர்ந்த திருவாளர் பீ. பீ. வீ. எ. ஜே. பீ. சேனுரத்ன அவர்கள் | உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சின் நிரந்தரச் செயலாளராகிய கலாநிதி ஜே. பீ. கலேகம அவர்கள் இத்தீவினை வந்தடையும்வரை, 1970 செத்தெம்பர் 16 ஆம் திகதியிலிருந்து தமது கடமைகளுடன் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சின் நிரந்தரச் செயலாளராக பதிற் கடமையாற்றக்கடவர் |

அதி உத்தமனுரின் கட்டளைப்படி,

டி. ஜீ. தயாரத்ன,
மகாதேசாதிபதியின் செயலாளர்.

மகாதேசாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு, 1970 செத்தெம்பர் 5.

9–526

## அரசாங்க அறிவித்தல்கள்

ம. தே. அ. எண் : ஓ. 529/70

மேன்மை தங்கிய மகாதேசாதிபதி அவர்கள் மாட்சிமை தங்கிய அரசியாரின் சார்பாக. மேன்மை தங்கிய திருவாளர் குவாங் யொங் வூ அவர்களை இலங்கைக்கு கொறியா சனநாயக மக்கள் குடியரசு அதிவிசேட, பூரணுதிகார தூதமைச்சராகத் தத்துவமளிக்கும் சான்ருேலையை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

மேன்மை தங்கியாரின் ஆணைவழி,

டி. ஜீ. தயாரத்ன,
மகாதேசாதிபதியின் செயலாளர்.

மகாதேசாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு, 1970 செத்தெம்பர் 5.

9–527

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கவனிக்க.——14,921/1 இலக்கங் கொண்ட அதிவிசேஷ வர்த்தமானித் தொடரின் இறுதி இல. 14,921/6.